SC.No.131/2024
Date: 11.06.2024.

**1, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 எதிரிகள் ஆஜரில்லை. Sec.317 Cr.P.C ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 5, 18 எதிரிகள் இறப்பு. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**PW. 59 சங்கர்**

**சாட்சி மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு 9, 12 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

பொதுவாக அரசியல் பிரமுகர்கள் வேறு மாவட்டத்திலிருந்து இம்மாவட்டத்திற்கு வரும்போது இம்மாவட்டத்தில் காவல்துறையினர்தான் மேற்கண்ட அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்கள் என்றால் சரிதான். முன்பாக நிர்ணயிக்கப்பட்ட அரசு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பிரமுகர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பின்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 07.01.2010 அன்று தமிழக சட்டமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று கொண்டிருந்த காலம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பொதுவாக சட்டமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று கொண்டிருக்கும்போது அரசு சார்ந்த அமைச்சர்கள் வரும்போது அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி எங்கள் மேல் அதிகாரிகளிடமிருந்தும், அரசு உயர்அதிகாரிகளிடமிருந்து அறிவுரை வழங்கப்படும் என்றால் பாதுகாப்பு பிரிவிலிருந்து காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர் மூலம் எங்களுக்கு அறிவுரை வழங்கப்படும். எங்கள் காவல்நிலையத்திற்கு அதுபோன்ற பாதுகாப்பு பிரிவிலிருந்து அறிவுரை எதுவும்பெறப்படவில்லை ஏன் என்றால் எங்கள் காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த குறிப்பிட்ட நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் அமைச்சர்கள் வரும்போது உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். அமைச்சர்கள் திரு.மைதீன்கான் மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர்களுக்கு யாரால் பாதுகாப்பு வழங்கப்பட்டது என்றால் அமைச்சர் பன்னீர்செல்வம் மதுரையிலிருந்து புறப்பட்டு வந்தவர் என்பதால் அவருக்கு மதுரை ஆயுதப்படை காவல்பிரிவினரால் Escort வாகன முன்னெடுப்புடன் பாதுகாப்பு வழங்கப்பட்டது. மைதீன்கானுக்கு திருநெல்வேலியிருந்து Escort வாகன முன்னெடுப்புடன் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஒரு அமைச்சர் வேறு மாவட்ட எல்கையிலிருந்து Escort வாகன முன்னெடுப்புடன் வரும்போது அவர் எந்த மாவட்ட எல்கையை அடைகிறாரோ அந்த மாவட்டத்தில் காவல்துறையினரால் Escort வாகன முன்னெடுப்பு வழங்கப்படும் என்றால் சரியல்ல. அவருக்கு எந்த இடத்திலிருந்து புறப்படுகிறாரோ அந்த காவல்படையினருக்கு எந்த அறிவுரை வழங்கப்படுகிறதோ

அதன்படி Escort காவல் வாகன முன்னெடுப்பு படையினர் செயல்படுவர். எந்த மாவட்ட எல்கைக்குள் நுழைகிறாரோ அந்த அந்த மாவட்டத்தில் காவல் படையினர்தான் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும், அதுவே பொதுவான விதி என்றும், மேற்கண்ட விதி இவ்வழக்கில் குறிப்பிடும் அமைச்சர்களுக்கும் பொருந்தும் என்றும், ஆனால் இவ்வழக்கில் மதுரை ஆயுதப்படை பிரிவினர் சாட்சிகளாக இருப்பதால் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Pilot Force என்ற பாதுகாப்பு முறை உள்ளது. Pilot Force என்றால் பாதுகாப்பு பணிக்கும் செல்லும் காவல் வாகனம் தவிர அதற்கு முன்னதாகவே ஒரு காவல் வாகனம் குறிப்பிட்ட தொலைவில் சென்று பாதுகாப்பை உறுதி செய்யும். அது முதலமைச்சர், ஆளுநர் போன்றவர்களுக்கு வழங்கப்படும். அமைச்சர்களுக்கு வழங்கப்படுமா என்றால் பாதுகாப்பு பிரிவு அறிவுரைக்கு ஏற்ப குறிப்பிட்ட அமைச்சர்களுக்கும் வழங்கப்படும். Advance Pilot Force என்ற பிரிவு முன்னதாக சென்று பாதுகாப்பு குறித்து விசாரணை செய்யும் காவல்பிரிவு என்றால் சரியல்ல. சற்று நேரம் என்பது சற்று நேரத்திற்கு முன்னர் செல்லும் Advance Pilot Force என்பது 2, 3 நிமிடங்களுக்கு முன்னதாக செல்லும். Advance Pilot Force என்பது சுமார் 1 கி.மீ தொலைவிற்கு முன்னதாகவே பாதுகாப்பை உறுதி செய்து வழி நடத்தும். Advance Pilot Force என்பது மிக குறுகிய அல்லது பாதுகாப்பு குறைந்த இடங்களில் ஆய்வு செய்து அதன்பின்னர் அனுமதிக்கும்போது மட்டுமே அமைச்சர் செல்லும் வாகனம் பின் தொடரும் என்றால் சரியல்ல. சுமார் 1 கி.மீ தொலைவிற்குள்ளாக செல்லும் Advance Pilot Force என்பது மேற்கண்ட 1 கி.மீ தொலைவிற்குள்ளான உறுதி செய்யும் பிரிவு ஆகும். 07.01.2010 அன்று Advance Pilot Force என்ற படைப்பிரிவு பணியில் இருந்தது என்றும், அவர்கள் அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு அமைச்சர்களுக்கு பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. முன்னதாக செல்லும் Advance Pilot Force படையினர் Positive தகவல் தெரிவித்து கொண்டே முன்னேறி செல்வார்கள் என்றும், அதன்பின்னரே அமைச்சர்கள் செல்லும் வாகனம் பின் தொடரும் என்றால் அது வழக்கமான நடைமுறை. சம்பவ தினத்தில் அவ்வாறு Advance Pilot Force செல்லவில்லை. 07.01.2010 அன்று Advance Pilot Force பணியில் இருந்தது என்றும், அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் அமைச்சர்களின் வாகனங்கள் முன்னேறி சென்றது என்றும், ஆனால் இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதால் அதுபோன்ற பாதுகாப்பு

வழங்கப்படவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் தகவல் கிடைத்து சம்பவ இடம் செல்லும்போது அங்கு ஆழ்வார்குறிச்சி காவல் உதவி ஆய்வாளர் இருந்தார். நான் கேள்விபட்டு சம்பவ இடம் செல்லும் முன்பாகவே ஆழ்வார்குறிச்சி காவல் அலுவலரால் புலனாய்வு துவக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆழ்வார்குறிச்சி காவல் உதவி ஆய்வாளர் ஜெயஸ்ரீ ஆவார். அவர்தான் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அலுவலர் என்றால் சரிதான். அவர் இவ்வழக்கில்(Pw54) விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே இவ்வழக்கில் புலன் விசாரணை ஜெயஸ்ரீ அவர்களால் துவக்கப்பட்டு புலானாய்வு நிலுவையில் இருந்த வழக்கு என்றால் சரியல்ல. ஜெயஸ்ரீ சம்பவ இடத்தில் நான் செல்லும் முன் இருந்தார் என்பதை குறிப்பிடாமலேயே முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். புகாரில் என்ன குறிப்பிடப்பட்டிருந்ததோ அதையே முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்திருந்தார். ஜெயஸ்ரீ முன்னதாகவே சம்பவ இடத்தில் கண்ணுற்ற விபரங்களை கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது என்றும், அந்த முதல் தகவல் அறிக்கையின் விபரங்கள் நாங்கள் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கைக்கு முற்றிலும் விரோதமாக அமைந்து இருந்தது என்பதால் அதை மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் முதல் முதலாக சம்பவ இடம் சென்றபோது மதியம் 3.10 முதல் 3.15 மணி இருக்கும். நான் சுமார் 2, 3 நிமிடங்கள் மட்டுமே அந்தஇடத்தில் நின்றிருந்தேன். மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுரைப்படி எதிரிகளை தேடி சென்றேன். சுமார் 1 கி.மீ சுற்றளவிற்குள்ளாக நான் தேடி சென்ற பகுதி அமைந்திருக்கும். மீண்டும் திரும்பி வந்தபோது மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு இருந்தார். அப்போது சுமார் 3.30 மணி இருக்கும். நான் 15 நிமிடங்களுக்குள்ளாக தேடி சென்று திரும்பி விட்டேன் என்றால் சரிதான். அதன்பின்னர் இரவு 11 மணி வரை அதே இடத்திலும், அதன் சுற்றுபுறங்களிலும் புலனாய்வின் பொருட்டு செயல்பட்டு வந்தேன். நான் சம்பவ இடத்தில் இறந்தவர் பயன்படுத்திய செல்போன் மற்றும் வாக்கி டாக்கி எதுவும் கைப்பற்றினேனா என்றால் சம்பவ இடத்தில் மேற்கண்ட பொருட்கள் எதுவும் இல்லை. இறந்தவர் எந்த வழக்கிற்காக வந்தாரோ அந்த வழக்கு தொடர்பான ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் அவர் ஆவணங்ளை ஒப்படைத்துவிட்டு திரும்பி வந்ததால் அதுபோன்ற ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் கூறுவதுபோல் அவர் அம்பாசமுத்திரத்தில் மேற்படி ஆவணங்களை

ஒப்படைத்துவிட்டு வந்தார் என்பதை உறுதி செய்ய அவர் ஒப்படைத்துவிட்டு வந்த அலுவலகத்திற்கு சென்று அதை உறுதி செய்து கொண்டேனா என்றால் நான் அவ்வாறு உறுதி செய்து கொள்ளவில்லை. மேற்கண்ட சான்று பொருட்கள்தான் வழக்கிற்கு அடிப்படையானவை என்றும், அவை இல்லாமல் இறந்தவர் வழக்கிற்காக சென்று திரும்பியவர் என்று கூறுவது அனுமானம் என்று சொன்னால் சரியல்ல. அம்பாசமுத்திரம் வட்டாச்சியர் விசாரிக்கப்பட்டுள்ளார். இறந்தவரின் அலைபேசியை கைப்பற்றி அதன் அழைப்பு பட்டியலை பெற்று அதன் தொடர்பு எண்களை கொண்டவர்களை சந்தேகப்படுத்தி நான் விசாரணையை முன்னெடுத்தோமா என்றால் அதுபோன்று எதுவும் நடத்தவில்லை. அவ்வாறு செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. அவர் அலைபேசியை கைப்பற்றி அழைப்பு பட்டியலை சோதனை செய்து அந்த நபர்களை சந்தேக வளையத்தில் கொண்டு வந்து விசாரித்து இருந்தால் உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடித்து இருக்க இயலும் என்றும், நான் அவ்வாறு செய்ய தவறியதன் மூலம் உண்மையான குற்றவாளிகளை தப்ப விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மணி நேரடியாக ஆழ்வார்குறிச்சி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். அவர் மீண்டும் அம்பாசமுத்திரம் திரும்ப வேண்டும் என்றால் சம்பவ இடத்தை கடந்துதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அவர் திரும்பி வரும்போது நான் அவரை கவனிக்கவில்லை. அவரும் என்னை சம்பவ இடத்தில் நின்று சந்தித்து தகவல் தெரிவித்துவிட்டு செல்லவில்லை. அவர் ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்திற்கு எந்த முறையில் எந்த வாகனத்தில் சென்றார், எப்போது புகார் கொடுத்து திரும்பினார், எவ்வாறு திரும்பினார் என்ற விபரங்களை என் விசாரணையில் கூறினார். அ.சா.1 மணியுடன் பணியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் பாதுகாப்பு பணியில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அடிப்படை பயிற்சி பெற்றவர்கள். பொதுவாக அமைச்சர்கள் பாதுகாப்பிற்கு அனுப்பும் படை பிரிவினர் சிறப்பு பயிற்சி பெற்றவர்களாக இருக்கலாம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சியில் சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசா.1 உடன் பயணித்த துரைமுருகன் என்ற பாதுகாப்பு காவலர் மாநில அளவில் துப்பாக்கி சுடும் பயிற்சியில் 2 வது பரிசு பெற்றவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளை துரத்தி செல்லும்போது துப்பாக்கி சுடு நடைபெற்றதாக எனது விசாரணையில் தெரியவந்தது. அன்றைய தினம் துப்பாக்கி சுடு எதுவும்

நடைபெறவில்லைஎன்றும், அவ்வாறு நடைபெற்றிருந்தால் சுடப்பட்ட துப்பாக்கி குண்டில் Cadridge கைப்பற்றப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு கைப்பற்றப்படாததால் துப்பாக்கி சுடு நடைபெறவே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் தேடி பார்த்தும் அந்த Cadridge கண்டுபிடிக்க முடியவில்லை. குறுகிய இடம் என்றும் எனவே அந்த சுப்பாக்கி சுடு நடந்த இடத்தில் Cadridge கண்டுபிடிப்பது சுலபமானதுதான் என்றும், நான் வேண்டுமென்றே நடைபெற்றதாக சம்பவத்தை உறுதிபடுத்துவதற்காக சுப்பாக்கி சுடு நடைபெற்றதாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மிக குறுகிய இடம் என்பதால் Cadridge தேடி கண்டுபிடிப்பது எளிது என்றும், நான் கூறுவதுபோல் சுப்பாக்கி சுடே நடைபெறவில்லை என்பதால்தான் நான் Cadridge கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அது SLR வகையை சேர்ந்தது ஆகும். 400 மீ வரை பாய்ந்து செல்லும் திறன் கொண்டது ஆகும். எனது விசாரணையின்படி எதிரிகளை நோக்கி 3 சுற்று மட்டுமே துப்பாக்கி சுடு சுடப்பட்டது என்றால் சரிதான். ஒவ்வொரு சுற்றும் எவ்வளவு அடி இடைவெளியில் சுடப்பட்டது என்றால் ஓடி கொண்டிருக்கும்போது சுடப்பட்டது ஆகும். ஓடி சென்ற நபர்கள் எவருக்கும் துப்பாக்கி சுடு காயம் எதுவும் இல்லை. அவ்வாறு சுப்பாக்கி சுடு நடைபெற்ற பின்னரும் தப்பி ஓடிய நபர்கள்களை அருகிலுள்ள காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் காவல் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அனைத்து காவல்நிலையத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தப்பி ஓடிய நபர்களின் அடையாளம் உடை பற்றிய விபரங்கள் அந்த தகவலில் இருந்ததா என்று தற்போது என்னால் கூற இயலாது. நான் கூறுவதுபோல் அருகில் உள்ள காவல்நிலையத்திற்கு எதுவும் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்றும், அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தால் அடையாளங்களுடன் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கும் என்றும், அதை மறைப்பதற்காகவே தற்போது என்னால் கூறஇயலாது என பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 5 எதிரிகளுக்கு 9, 12 எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றும், 9, 12 எதிரிகளுக்கும், சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 9, 12 எதிரிகளுக்கு சம்பவத்திற்கு முன்பு முன் வழக்குகள் எதுவும் உள்ளதா என்றால் எதுவும் இல்லை. 9, 12 எதிரிகள் பணத்திற்காக கொலை செய்துள்ளார்கள் என்று நான் ஆதாரம் எதுவுமின்றி குற்றம் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பணத்திற்காக கொலை

செய்யும் நபர்கள் என்று முன்நிகழ்வு எதுவும் இல்லாத நிலையில் 9, 12 எதிரிகள் பணத்திற்காக குற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்று தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 5 எதிரிகள் முறையாக விசாரணை செய்யாமலேயே எதிரிகளாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், அவர்களின் உறவினர் என்பதாலேயே 9, 12 எதிரிகளையும் எதிரிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 9 வது எதிரி முத்துகுமார் 06.02.2010 அன்று பகல் 12 மணிக்கு ஆழ்வார்குறிச்சி VAO முன்பு ஆஜராகி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக எனது விசாரணையில் துலங்கும். கிராம நிர்வாக அலுவலர் எதிரியை என்னிடம் எப்போது ஆஜர் ஆனார் என்றால் மாலை 4 மணியளவில் ஆஜர் ஆனார். ஆழ்வார்குறிச்சி VAO அலுவலகத்திற்கும், காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தொலை வு என்றால் சுமார் 1/2 கி.மீ துரம் இருக்கும். 9 வது எதிரி முத்துகுமார் 12 மணிக்கு ஆஜர் ஆனவுடன் கிராம நிர்வாக அலுவலர் அப்போதே எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. ஏன் 4 மணி நேர காலதாமத்திற்கு பின்னர் எனக்கு தகவல் தெரிவித்து ஆஜர்படுத்தினார் என்பது குறித்து எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். அவர் VAO அலுவலகத்தில் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது வாக்குமூலம்பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னரே ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்பதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. 4 மணி காலதாமதம் தர்க்கரிதீயாக கூட ஏற்கதக்கதாக இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 9 வது எதிரி முத்துகுமாரை முன்னதாகவே எங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அவர் மூலம் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் தயாரிக்கும் ஆவணங்கள் சட்டத்தின் பார்வையில் ஏற்புடையதாக இல்லைஎன்பதால் கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக குறிப்பிட்டு ஆவணங்களை பதிவிட்டு சாட்சியாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் 9 வது எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை என்றும், முன்னதாகவே வீட்டில் இருந்தவரை எங்கள் சட்டவிரோத காவலுக்கு உட்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அவரை அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் சம்பவத்தின்போதுஅவர் அணிந்திருந்த இரத்தகறை பட்ட சட்டை கைப்பற்றப்பட்டது. அது சாட்சிகள் முன்பாக கைப்பற்றப்பட்டது ஆகும். அந்த சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் ஆவார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் ஒரே சாட்சிகள் கையொமிட்டதற்கு குறிப்பான காரணம் எதுவும் இல்லை. குமாரின்

ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட 7 மணி நேரம் கழித்துதான் அவர் அடையாளம் காட்டி இடத்திற்கு சென்று அவர் அடையாளம் காட்டி பொருட்களை கைப்பற்றினோம். ஏன் என்றால் அதற்கிடையே மற்ற எதிரிகளும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததால் தாமதம் ஏற்பட்டது. சான்று பொருள் கைப்பற்றப்பட்ட இடம் காவல்நிலையத்திலிருந்து சுமார் 15 கி.மீ - 20 கி.மீ துரம் அமைந்து இருக்கக்கூடும். மேற்கண்ட நேரம் முழுவதும் கிராம நிர்வாக அலுவலர் என்னுடன்தான் உதவியாக இருந்தார். கிராம நிர்வாக அலுவலருக்கும் கு.வி.மு.ச 161 வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வாக்குமூலத்தில் அதிகாலை 4.30 மணிக்கு பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்டுள்ளது அது தவறாகும். அத்தாட்சியில் 07.02.2010 அன்று 00.15 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவணங்கள் அனைத்தும் எங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்பதால்தான்அவை முன்னுக்குபின் முரணாக அமைந்துள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 12 வது எதிரியை 05.02.2010 காலை 11.30 மணிக்கு கைது செய்துள்ளேன். அவர் அயன்திருவாலிஸ்வரம் கிராம நிர்வாக அலுவலர் முன்பாக ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளார். அயன்திருவாலிஸ்வரம் கிராம நிர்வாக அலுவலர் எவ்வளவு நேரம் 12 வது எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் காலை 9.15 மணிக்கு வாக்குமூலத்தை பதிவு செய்ய துவங்கி அதனை பின்னர் முடித்து என்னிடம் 11.30 மணிக்கு ஆஜர்படுத்தினார். சுமார் 2 1/2 மணி நேரம் 12 வது எதிரி கிராம நிர்வாக அலுவலருடன் இருந்துள்ளார். அந்த கிராம நிர்வாக அலுவலர் 12 வது எதிரி ஆஜரானவுடன் எங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. அயன்திருவாலிஸ்வரம் எங்கள் காவல்நிலையத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. காலை 11.30 மணியிலிருந்து சுமார் 1 1/2 மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் நான் முன்னுக்குபின் முரணாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதே கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது அலுவலகத்தில் இருக்கும் மற்றொரு நபரும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். ஏற்கனவே 12 வது எதிரி யாரிடம் வாக்குமூலம் கொடுத்தார்ள ன்று கூறப்படுகிறதோ அதே நபரையே நான் தயாரித்த ஒப்புதல் வாக்குமூலத்திலும்,அத்தாட்சியிலும் சாட்சியாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், இவை

அனைத்தும் எங்கள் காவல்நிலையத்தில் முன் தயாரிப்புடன் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.9, 12 யின் அத்தாட்சி எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் எதிரியை காவல் அடைப்பிற்கு அனுப்பியபோதே அனுப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி அனைத்தும் பின்னிட்டு தாமதாமாக நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றும், அவற்றை எங்கள் வசதிக்கு ஏற்ப பின்னிட்டு தயாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் குறிப்பிடும் தேதிக்கு 4, 5 தினங்களுக்கு முன்பாகவே எங்கள் கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்து, எங்கள் காவல்நிலையத்தில் புகைப்படம் எடுத்துக்கொண்டு சாட்சிகளை அவர்களுக்கு அடையாளம் காட்டி அதன்பின்னரே ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றும், அதனால்தான் அடையாள அணிவகுப்பு நடவடிக்கையின்போது நீதித்துறை நடுவர் முன்பாக அவர்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. காவல் புகைப்பட நிபுணர்கள் இவ்வழக்கில் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். வீடியோ கிராபர் எவரும் சாட்சியாக குறிப்பிடவில்லை. ஆனால் வீடியோ எடுத்த பத்திரிக்கை துறையை சேர்ந்தவர்கள் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள். புகைப்படம் மற்றும் வீடியோ துண்டுகள் ஆவணங்களாக குறியிடப்பட்டுள்ளது. அவற்றில் எதிலும் எதிரிகளின் அடையாளம், முகம் மற்றும் இருப்பு பற்றி எந்த தடையமும் இல்லை என்று சொன்னால் சரிதான். 9, 12 எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லைஎன்றும், நான் முறையாக விசாரணை செய்யாமல், எதிரிகளுக்கு விரோதமாக ஆவணங்களை உற்பத்தி செய்து கையிருப்பு சாட்சிகளை பயன்படுத்தி கொண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றும், முறையாக நடத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வேண்டுமென்றே உண்மை குற்றவாளிகள் மறைத்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-B.Rajavel,
Principal District Judge,
Tenkasi